# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி

முதல் பக்கத் தொடர்ச்சி

அத்தகைய நெருக்கடிக்கு இடையிலும், பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான பல புதுமையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும், வாசிப்பு இயக்கம், மாவட்டம்தோறும் மாதிரிப் பள்ளிகள், 28 மாவட்டங்களில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே கற்றல் எல்லைகளை விரிவுபடுத்து வதற்கான தகைசால் பள்ளிகள், மாணவச் செல்வங்களின் கலை ஆற்றலை இனம் கண்டறிந்து ஊக்குவிப்பதற்காகப் பள்ளிகளில் கலைத்திருவிழா நடத்தி வெற்றி பெறும் மாணவர்களுக்கு விருதுகளை வழங்குதல், அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 519.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் 455.32 கோடி ரூபாய் செலவில் 22,931திறன்மிகு வகுப்பறைகள் எனப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

**அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய கற்பித்தல் முறை!**

இவற்றில், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களைச் சிறப்பு பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் கண்டு, அவர்களுக்கென நலம் நாடி செயலி வடிவமைக்கப்பட்டுத் தக்க சிறப்புக் கல்வி வழங்குவது உள்ளிட்ட திட்டங்களின் மூலம் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய கற்பித்தல் முறையாகப் பள்ளிக் கல்வியை மேம்படுத்துவது மிகச் சிறப்பான ஒரு திட்டமாகும்.

ஆசிரியப் பெருமக்களின் தேவைகளை உணர்ந்த அரசு இந்த அரசு. அதனால், 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு 81 கோடி ரூபாய் செலவில் கைக்கணினிகள் (Tablet), அரசுப் பள்ளி களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பொது மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நிரவல் கலந்தாய்வு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு இணைய வழியில் EMIS மூலம் நடத்துதல், 14,019 ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மூலம் நியமனம் செய்ய ஆணை, கற்றல் கற்பித்தல், ஆசிரியர் திறன்மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகனார் பெயரில் விருது,

**ஆசிரியர்களுக்கான திட்டங்களை குறைவின்றி நிறைவேற்றுகிறோம்!**

அரசுப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்விச் செலவினத்திற்கான உதவித் தொகை 50,000 ரூபாயாக உயர்வு, ஆசிரியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை செய்வதற்கான திட்டம் என, ஆசிரியர்களுக்கான திட்டங்களையும் குறைவின்றி நிறைவேற்றி வருகிறோம். மாணவச் செல்வங்கள், ஆசிரியப் பெருமக்களுக்கான 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களின் பட்டியல் மிக நீளமானது. அவற்றில் சிலவற்றை மட்டுமே தலைப்புச் செய்திகளாக சுட்டிக் காட்டி யுள்ளேன்.

மாணவர் நலனையும், ஆசிரியர் நலனையும் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை இரண்டு கண்களெனப் போற்றிச் செயலாற்றி வருகிறது. பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் இன்னும் வளரும்... தொடரும் என்று கூறி, புதிதாக பணியேற்கும் இடைநிலை ஆசிரியப் பெருமக்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வாழ்த்துச் செய்தியை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விழா மேடையில் பெரும் கரவொலிக்கிடையே வாசித்தார்.




நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக, கலைஞானி கமல்ஹாசன் நேற்று பதவியேற்றதறிவோம்! முன்னதாக, நேற்று முன்தினம் அவர், புதுடெல்லி – நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள, அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார். அப்போது மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா உடனிருந்தார்.

பல லட்சம் பேருக்கு பார்வையளித்த மருத்துவர்

# நம்பெருமாள்சாமி மறைவு மருத்துவத் துறைக்கு பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 26 -**

**பல லட்சம் பேருக்கு பார்வையளித்த மருத்துவர் நம்பெருமாள் சாமி மறைவு மருத்துவத் துறைக்கு மாபெரும் இழப்பு ஆகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை குழுமத்தின் மதிப்புறு தலைவர் நம்பெருமாள்சாமி மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புகழ்பெற்ற மருத்துவரும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை குழுமத்தின் மதிப்புறு தலைவருமான 'பத்மஸ்ரீ' நம்பெருமாள்சாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையுற்றேன்.

தென் தமிழ்நாட்டில் மிக எளிய வேளாண் குடும்பத்தில் பிறந்து, மதுரை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பையும், அமெரிக்காவில் மேல்படிப்பையும் முடித்து இந்தியாவின் முதல் விழித்திரை சிறப்பு மருத்துவர் என்ற பெயர் பெற்றவர் நம்பெருமாள்சாமி அவர்கள்.



ஏழை எளியோருக்கும் கண்மருத்துவம் கிடைக்க வேண்டும், கண்பார்வைக் குறைபாட்டை நீக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தொடங்கப்பட்ட அரவிந்த் கண் மருத்துவமனையின் நிறுவனர்களில் ஒருவர் மருத்துவர் நம்பெருமாள்சாமி என்பது குறிப்பிடத்தக்கது.

இலட்சக்கணக்கான மக்களுக்குக் கண்பார்வை அளித்த நம்பெருமாள்சாமி அவர்களின் சேவைக்கு அங்கீகாரமாக உலகப் புகழ்பெற்ற டைம் இதழ், உலகின் செல்வாக்கு மிகுந்த 100 நபர்களில் ஒருவராகவும் இவரைத் தேர்வு செய்திருந்தது.

நம்பெருமாள்சாமி அவர்களிடம் பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களும் மருத்துவர்களாகி அவரது வழியில், ஏழை எளிய மக்களுக்குக் கண் சிகிச்சை அளித்து வருகின்றனர் என்ற வகையில் இத்துறையில் அவர் புரிந்துள்ள சாதனை காலத்தால் அழியாதது.

பல இலட்சம் பேருக்கு பார்வையளித்த மருத்துவர் நம்பெருமாள்சாமி அவர்களின் மறைவு மருத்துவத்துறைக்கும் மதுரை மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர், மருத்துவத்துறை நண்பர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒரு தொகுதியில் 23 ஆயிரம் பேர் என

# பீகாரில் 56 லட்சம் வாக்காளர்களை நீக்கிய தேர்தல் ஆணையம்!

## எதிர்க்கட்சிகள் கடும் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 26-

பீகாரில் ஒரு தொகுதிக்கு 23 ஆயிரம் வாக்காளர்கள் வீதம் மொத்தம் 56 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசு மீதும், தேர்தல் ஆணையம் மீதும் கடும் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளனர். பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தீவிர சிறப்பு வாக்காளர் திருத்த பட்டியலை தேர்தல் ஆணையம் தயாரித்து வருகிறது. இந்த சிறப்பு தீவிர திருத்தம் 2003ஆம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் இணைந்தவர்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. 2003ஆம் ஆண்டுக்குபிறகு வாக்காளர் பட்டியலில் இணைந்தவர்கள் தங்கள் ஆவணத்தை வழங்க நேற்று கடைசி நாளாகும்.

இந்நிலையில், தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள 20 லட்சம் பேர் இறந்துள்ளனர். 28 லட்சம் பேர் வேறு மாநிலங்களில் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ளதால், அவர்கள் பீகாரில் வாக்களிக்கத் தகுதியற்றவர்கள். மேலும் ஏழு லட்சம் பேர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்துள்ளனர்.

**பீகாரில் பெரும் சர்ச்சை!**

தற்போதைய பட்டியலில் கூடுதலாக ஒரு லட்சம் பேரை தொடர்பு கொள்ள முடியவில்லை. மேலும் 15 லட்சம் வாக்காளர்கள் சரிபார்ப்பு படிவங்களை திருப்பி அனுப்பவில்லை. இந்த கணக்கீட்டின்படி, பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 56 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பீகார் வாக்காளர் இறுதிப் பட்டியல் செப்டம்பர் 30 ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. பீகார் மாநிலத்தில் 243 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. வாக்காளர் பட்டியலில் இருந்து தற்போதைய நிலவரப்படி, 56 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டால், ஒரு தொகுதிக்கு சராசரியாக 23,045 வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

**56 லட்சம் பேரை நீக்குவது ஏற்றுக்கொள்ள முடியாது!**

பீகார் மாநிலத்தில் கடந்த 10 முக்கிய தேர்தல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து, அதாவது தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் இருந்து 56 லட்சம் பேரை நீக்குவது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கி உள்ளன. ஏனெனில் 2020 தேர்தலில் எதிர்க்கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளம் 52 இடங்களை 5,000 அல்லது அதற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்திலும், 40 இடங்களை 3,500 அல்லது அதற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்திலும் இழந்தது. இதனால் தற்போது மேற்கொண்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கீழடி அகழாய்வு அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏன்?

## திருச்சி சிவா கேள்விக்கு மத்திய அமைச்சர் விளக்கம்!

புது தில்லி, ஜூலை 26-

கீழடி அகழாய்வின் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளைப் பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதி பூண்டுள்ளதாக மத்திய கலாசாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.



கீழடி யில் 2013-16 ஆண்டுகளில் நடத்தப்பட்ட இரு கட்ட ஆய்வறிக்கையை நிறுத்தி அறிக்கை வெளியிடுவதை தாமதப்படுத்தியது தொடர்பாக மாநிலங்களவையில் திருச்சி சிவா கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் வியாழக்கிழமை அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில், 'வைகை நதிப் படுகையில் ஆய்வு நடத்திய பிறகு, கீழடியின் தொல் பொருள் திறனை இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அடையாளம் கண்டுள்ளது. 2014-15, 2015-16 மற்றும் 2016-17 ஆண்டுகளில் இந்த இடம் அகழாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. முக்கியமான இடங்களில் அகழாய்வுகள் மாநில தொல் பொருள் துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்பட பல்வேறு நிறுவனங்களால் செய்யப்படுகின்றன. தற்போது, கீழடி அகழாய்வை தமிழக தொல் பொருள் துறை நடத்தி வருகிறது' என்று கூறியுள்ளார்.

மதுரை கிளை உயர்நீதி மன்றத்தில் அளித்த உறுதி மொழிக்கு மாறாக ஒன்பது மாதங்களாகியும் கீழடி அறிக்கை இன்னும் வெளியிடப்படாதது குறித்த திருச்சி சிவாவின் மற்றொரு கேள்விக்கு. அப்படியொரு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும், 2014-15, 2015-16 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வறிக்கை ஏற்கெனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பதிலளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து கீழடி அகழாய்வு அறிக்கையை தயாரித்த மூல ஆய்வாளரிடம் மீண்டும் அறிக்கையை சமர்ப்பிக்க என்ன காரணம் என்ற திருச்சி சிவாவின் மூன்றாவது கேள்விக்கு, 'ஆய்வுக்குத் தலைமை தாங்கும் தொல்பொருள் ஆய்வாளர் சமர்ப்பிக்கும் அறிக்கையை நிபுணர்கள் குழு ஆய்வுக்கு உள்படுத்தி சரிபார்க்கும். பிறகு நிபுணர் குழு வின் முடிவுகள் அறிக்கையில் சேர்க்கப்பட்டு ஆய்வுக்குத் தலைமை தாங்கிய ஆய்வாளரின் ஒப்புதலுடன் அலுவல்பூர்வமாக அறிக்கையை தொல்லியல் துறை வெளியிடும்.

இந்த விஷயத்தில் தலைமை ஆய்வாளரின் அறிக்கை ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டு நிபுணர் குழுவின் முடிவுகள் அவரிடம் பகிரப்பட்டுள்ளன. கீழடி அகழாய்வின் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளைப் பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதிபூண்டுள்ளது' என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபன தலைவர்களில் ஒருவரும், முதுபெரும் தோழரும், கேரளா முன்னாள் முதல்வருமான தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன் உடல் நலக்குறைவால் கடந்த ஞாயிறு அன்று மறைவெய்தினார். இதையொட்டி திருச்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட அலுவலகம் வெண்மணி இல்லத்தில் கேரள மாநில முன்னாள் முதல்வர் பி.எஸ். அச்சுதானந்தன் அவரின் திருஉருவப்படத்திற்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மலர் துவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில கட்டுபாட்டுக் குழு தலைவர் எஸ்.ஸ்ரீதர், வெற்றிச்செல்வம், மாநகர் மாவட்டச் செயலாளர் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கவுன்சிலர் சுரேஷ், பாரதி, சீனிவாசன், தி.மு.க. மலைக்கோட்டை பகுதி கழகச் செயலாளர் மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்!

# கொளக்காநத்தம் கிராமத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 26 -

முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், பார்வை இழப்பு தடுப்புச்சங்கம் மற்றும் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் கொளக்காநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது , இந்த முகாமிற்கு ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராகவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். முகாமில் அனைத்து கண் நோய்களுக்கும் சிகிச்சை அளித்து ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும் கண் அறுவை சிகிச்சை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அன்றே மதுரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு உள்விழி லென்ஸ், அறுவை சிகிச்சை, மருந்து, தங்கும் வசதி, போக்குவரத்து மற்றும் உணவு ஏற்பாடு செய்தனர். முகாமில் மதுரை தனியார் மருத்துவமனை மருத்துவக் குழுவினர், கண்புரை, கண்ணீர் அழுத்த நோய், குழந்தை களின் கண் நோய் உள்ளிட்ட பல்வேறு கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை அளித்தனர்.

இந்த முகாமில் கொளக்காநத்தம், அயினாபுரம், காரை, தெரணி, புதுக்குறிச்சி, அணைப்பாடி, கொளத்தூர், இலுப்பைக்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து 300 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அறுவை சிகிச்சை தேவைப்படும் 74 நபர்களை வாகனம் மூலம் மதுரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

இம்முகாமில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன், மாவட்ட அமைப்பாளர்கள் எம். சுந்தரராசு, குமார், அன்புச்செல்வன், பாலமுருகன், இளவரசு, ஒன்றிய நிர்வாகிகள் ராமசாமி, புகழேந்தி, எழில்ராஜ், பிரபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், ஆலப்பட்டியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், துறை வாரியாக அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் பார்வையிட்டு ஆய்வு செய்து உடனடியாக பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். அப்போது உடன் மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் சித்ரா சந்திரசேகர், ஒன்றியச் செயலாளர் தனசேகரன் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.